www.StudyGuideIndia.com

**7066**

Register Number

**Part III**

# பொருளியல் / ECONOMICS

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

குறிப்பு : i) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் **ஒரு** மதிப்பெண். 50 × 1 = 50

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக : 14 × 1 = 14

1. பொருளியலின் தந்தை எனப்படுபவர்

அ) ஆதம் ஸ்மித் ஆ) மார்ஷல்

இ) இராபின்ஸ் ஈ) சாமுவேல்சன்.

2. தேவை எனில் வைத்துக் கொள்வது, இல்லையெனில் நீக்கி விடுவது எனும் கொள்கை .................... பொருளாதாரத்தில் காணப்படுகிறது.

அ) கலப்பு ஆ) பொது உடைமை

இ) முதலாளித்துவம் ஈ) தொன்மை.

3. பயன்பாடு எனப்படுவது

அ) மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டத்தின் பயன்

ஆ) ஒரு பண்டத்தை விரும்புவது

இ) ஒரு பண்டத்தினால் பெறக்கூடிய மனநிறைவின் அளவு

ஈ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் ஒரு பண்டத்தின் சக்தி.

[ Turn over

www.StudyGuideIndia.com

4. அளிப்பு வளைகோடானது

அ) மேல்நோக்கிச் செல்லும் கோடாகும்

ஆ) கீழ்நோக்கிச் சரிந்து செல்லும் கோடாகும்

இ) படுகிடைக் கோடாகும்

ஈ) செங்குத்துக் கோடாகும்.

5. தேவை என்பது ஒரு பண்டத்தை

அ) வாங்குவதற்கான தயார் நிலையைக் குறிக்கும்

ஆ) வாங்குவதற்கான ஆற்றலைக் குறிக்கும்

இ) வாங்க வேண்டுமென்ற வெறும் விருப்பத்தை மட்டும் குறிக்கும்.

ஈ) வாங்குவதற்கான விருப்பமும், முடிவும், வாங்கும் சக்தியையும் குறிக்கும்.

6. சமநிலை எனும் கருத்தமைவு இதனுடன் தொடர்புபடுத்தி விளக்கப்படுகிறது

அ) விலையை ஆ) காலத்தை

இ) அளிப்பை ஈ) தேவையை.

7. வேலைப் பகுப்பு முறையை அறிமுகப்படுத்தியவர்

அ) ஆல்பிரட் மார்ஷல் ஆ) ஆதம் ஸ்மித்

இ) கீன்ஸ் ஈ) ஹிக்ஸ்.

8. குறுகிய கால சராசரி செலவினைச் சுருக்கமாகக் குறிப்பிடப்படுவது

அ) SAC ஆ) STC

இ) SVC ஈ) TFC.

9. முற்றுரிமை எப்பொழுது காணப்படும் ?

அ) ஒரே ஒரு உற்பத்தியாளர் ஆ) ஒரே ஒரு நுகர்வோர்

இ) சில உற்பத்தியாளர்கள் ஈ) பல உற்பத்தியாளர்கள்.

10. வாரம் என்பது .................... பயன்படுத்திக் கொள்ளக் கொடுக்கப்படும் விலையாகும்.

அ) மூலதனம் ஆ) அமைப்பு

இ) உழைப்பு ஈ) நிலம்.

www.StudyGuideIndia.com

11. "அளிப்பு அதற்கான தேவையைத் தாமே உருவாக்குகிறது" என்று கூறியவர்

அ) ஆதம் ஸ்மித் ஆ) J.M. கீன்ஸ்

இ) ஜே.பி. சே. ஈ) ஸ்டோனியர்.

12. முதலீட்டினைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாக விளங்குவது

அ) வட்டி வீதம் ஆ) பொருளாதார வளர்ச்சி

இ) நிதிக் கொள்கை ஈ) திறனைப் பயன்படுத்தும் அளவு.

13. பணக் கொள்கையைச் செயல்படுத்துவது

அ) மைய மாநில அரசுகள் ஆ) நாட்டின் மத்திய வங்கி

இ) கடன் தரும் உள்ளூர் ஆட்கள் ஈ) தனியார் நிறுவனங்கள்.

14. பொது நிதி எனப்படுவது எதைப் பற்றியது ?

அ) வரவு ஆ) செலவு

இ) வரி ஈ) அரசின் வரவு - செலவு.

II. கோடிட்ட இடங்களை நிரப்புக : 12 × 1 = 12

15. செல்வ இலக்கணத்தைத் தந்தவர் ........................ ஆவார்.

16. முதலாளித்துவ பொருளாதாரம் ........................ பொருளாதாரம் எனவும் பெயர் பெறும்.

17. நுகர்வோர் எச்சம் எனப்படுவது கொடுக்க எண்ணும் விலை – ........................ விலை.

18. ஒரு பண்டத்தின் விலை குறைவினால் நுகர்வோரின் ........................ வருமானம் உயர்கின்றது.

19. தேவையும், அளிப்பும் ஒரு குறிப்பிட்ட விலையில் ........................ ஆகும் பொழுது சமநிலை தோன்றுகிறது.

20. ஒரு பணியை ........................ செய்வதால் சலிப்பு ஏற்படுகிறது.

21. உழைப்பிற்கு ஒரு நிறுவனம் ........................ அளிக்கின்றது.

[ Turn over

www.StudyGuideIndia.com

22. விலை பேதம் ........................ முற்றுரிமை என அழைக்கப்படுகிறது.

23. மக்கள் ரொக்கமாகப் பணத்தை வைத்துக் கொள்ள விரும்புவது ........................ நோக்கத்திற்காக ஆகும்.

24. இறுதிநிலை சேமிப்பு முனைப்பு = $\frac{.....}{\Delta Y}$.

25. கடன் பெறும் செலவு அதிகரிக்கும் கொள்கைக்கு ........................ கொள்கை என்று பெயர்.

26. அமைப்பு ( வடிவம் ) முறையில் வரிகளை நேர்முக வரிகள் என்றும், ........................ வரிகள் என்றும் வகைப்படுத்தலாம்.

III. கீழ்வருவனவற்றைப் பொருத்துக : 12 × 1 = 12

| | |
|---|---|
| 27. ஐகோஸ் | அ) J.R. ஹிக்ஸ் |
| 28. பொருளியலுக்கான நோபெல் பரிசு பெற்ற இந்தியர் | ஆ) நெருங்கிய பதிலிகள் |
| 29. சமநோக்கு வளைகோடுகள் | இ) இடம் பெயரக்கூடிய எண்ணம் குறைவு |
| 30. காபியும், தேநீரும் | ஈ) துன்பம், இன்பம் |
| 31. காலக் கோட்பாடு | உ) போக்குவரத்து செலவின்மை |
| 32. உழைப்பு | ஊ) ஜோசப் ஷூம்பீட்டர் |
| 33. உண்மைச் செலவு | எ) J.M. கீன்ஸ் |
| 34. நிறைவுப் போட்டி | ஏ) பணவாட்டம் |
| 35. புத்தாக்க இலாபக் கோட்பாடு | ஐ) டாக்டர். C. ரங்கராசன் |
| 36. முதலீட்டுப் பெருக்கி | ஒ) ஆல்பிரட் மார்ஷல் |
| 37. விலைமட்டம் தொடர்ந்து குறைந்தால் | ஓ) அமர்த்தியா குமார் சென். |
| 38. பன்னிரெண்டாம் நிதிக்குழு | ஔ) இல்லம். |

www.StudyGuideIndia.com

IV. பின்வரும் வினாக்களுக்கு ஒரிரு சொற்களில் விடை தருக : $12 \times 1 = 12$

39. பொருளியலுக்கான வளர்ச்சி இலக்கணத்தை வகுத்தவர் யார் ?

40. பொதுமை நலனை அளக்க உதவிடும் உண்மையான அளவீடு எது ? என்று அமர்த்தியா குமார் சென் குறிப்பிடுகின்றார் ?

41. தேவை விதியினை முதன் முதலாக உருவாக்கிய பிரான்ஸ் நாட்டு கணித வல்லுநர் யார் ?

42. மார்ஷலின் பயன்பாட்டு ஆய்வுக் கோட்பாட்டின் மறுபெயர் யாது ?

43. மிகக் குறுகிய காலத்தில் அங்காடியில் நிலவும் விலையினை எங்ஙனம் குறிப்பிடலாம் ?

44. மனிதனால் உருவாக்கப்படும் உற்பத்திக் காரணி யாது ?

45. நிகர விற்பனை மாற்றத்தால் மொத்த வருவாயில் ஏற்படும் மாற்றத்தை எவ்வாறு அழைக்கலாம் ?

46. எவ்வகைப் போட்டியில் பண்டங்கள் ஒன்று போல் தோன்றினாலும் ஒத்தவையாக இராது ?

47. பிழைப்பு மட்டக் கூலிக் கோட்பாட்டை "கூலி பற்றிய இரும்பு விதி" என்று கூறியவர் யார் ?

48. வருமான மாற்றத்தால் நுகர்வில் ஏற்படும் குறிப்பிட்ட விகித அளவு மாற்றத்தினை என்னவென்று குறிப்பிடலாம் ?

www.StudyGuideIndia.com

49. பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் நேரடி நடவடிக்கை எது ?

50. ஒரு ஆண்டில் எதிர்பார்க்கப்படும் நிதிநிலை குறித்த வரைவினை என்னவென் குறிப்பிடலாம் ?

## பகுதி - ஆ

V. குறிப்பு : i) எவையேனும் **பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் நான்கு அல்லது ஐந்து வரிகளில் அமைந்திட வேண்டும்.

$10 \times 3 = 30$

51. கிடைப்பருமை இலக்கணத்தைக் குறிப்பிடுக.

52. பேரினப் பொருளியல் எதைப் பற்றியது ?

53. 'முதலாளித்துவத்தில் நுகர்வோரே அரசன்' எவ்வாறு ?

54. நுகர்வோர் எச்சம் என்றால் என்ன ?

55. அங்காடிக் காலம் என்றால் என்ன ?

56. குறுக்குத் தேவை நெகிழ்ச்சி என்றால் என்ன ?

57. செயல்முறைப் பகிர்வு என்றால் என்ன ?

58. குறைந்து செல் விகித விளைவு என்றால் என்ன ?

59. இடப் பயன்பாடு என்பது யாது ?

60. பணச்செலவு என்றால் என்ன ?

61. நிறைவுப் போட்டியின் கீழ் ஒரு நிறுவனத்தின் தேவை வளைகோடு படுகிடைக் கோடாக இருப்பது ஏன் ?

www.StudyGuideIndia.com

62. முற்றுரிமைப் போட்டி என்பது எதனைக் குறிக்கும் ?

63. 'முடுக்கி' குறிப்பு தருக.

64. 'பணம்' - வரையறு.

65. பற்றாக்குறை நிதியாக்கம் என்றால் என்ன ?

## பகுதி - இ

VI. *குறிப்பு :* i) எவையேனும் **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் ஒரு பக்க அளவில் அமைந்திட வேண்டும்.

6 × 10 = 60

66. நுண்ணினப் பொருளியல், பேரினப் பொருளியல் - வேறுபடுத்துக.

67. குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியின் குறைபாடுகள் யாவை ?

68. அளிப்பு விதியினை வரைபடத்துடன் விவரி.

69. விலைத் தீர்மானத்தில் குறுகிய காலம், நீண்ட காலம் - பங்கினை விவரி.

70. வேலைப் பகுப்பு முறை - என்பது யாது ? அதன் நன்மை, தீமைகளை விவரி.

71. நீண்ட கால செலவுக் கோட்டினை படத்துடன் விவரி.

72. நிறைவுப் போட்டியின் சிறப்பியல்புகள் யாவை ?

73. பிழைப்பு மட்டக் கூலிக் கோட்பாடு, எச்ச உரிமைக் கோட்பாடு - குறிப்பு தருக.

74. இலாபம் பற்றிய புத்தாக்கக் கோட்பாட்டினை விளக்குக.

75. நிதியியல் கொள்கையின் குறைபாடுகளை விவரி.

[ Turn over

www.StudyGuideIndia.com

## பகுதி - ஈ

VII. *குறிப்பு :* i) எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் மூன்று பக்க அளவில் அமைந்திட வேண்டும்

$3 \times 20 = 6$

76. கலப்புப் பொருளாதாரத்தின் பண்புகளைக் கூறி, அதன் நன்மை, தீமைகளை விவரி

77. மனித விருப்பங்களின் இயல்புகளை விவரி.

78. பல்வேறு தேவை நெகிழ்ச்சியின் வகைகளைத் தகுந்த வரைபடங்களுடன் விளக்குக

79. முற்றுரிமையில் சமநிலை விலையும், உற்பத்தியும் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றது முற்றுரிமையின் நிறை, குறைகள் யாவை?

80. தொன்மைப் பொருளாதார வேலை வாய்ப்பு உற்பத்திக் கோட்பாட்டை கீன் எங்ஙனம் குறை கூறினார் என விளக்குக.

81. பணவீக்கத்தின் வகைகள், காரணங்கள் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளை விவரி.

www.StudyGuideIndia.com